Registered as Newspaper

THE SUDAR OLI

# சுடர் ஒளி

23.05.2020 சனிக்கிழமை




# நாடு முழுதும் நாளை 900 சோதனைச் சாவடிகள்

கொழும்பு, மே 23

நாளை ஞாயிற்றுக்கிழமையும் திங்கட்கிழமையும் ஊரடங்கு உத்தரவு நடைமுறையில் உள்ள நிலையில் நாடு முழுவதும் 900க்கும் மேற்பட்ட சோதனைச் சாவடிகள் அமைக்கப்படும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். 2

## புதினம் தெரியுமோ?

கிளிநொச்சியில் நாட்டாமை காட்டும் அரசியல்வாதி ஒருவர் நேற்று சந்திப் பொன்றை நடத்தியிருந்தார். அந்தச் சந்திப்பில் சுவாரசியமான சில சம்பவங்கள் நடந்துள்ளன. இப்போது நாட்டில் கொரோனா தொற்று ஏற்பட்டுள்ள நிலையில் மக்கள் கூட்டமாகக் கூடுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. அந்த ஜமீன் அதையெல்லாம் கணக்கில் எடுக்காது சந்திப்பை நடத்தியிருக்கின்றார். அந்தச் சந்திப்பில் கலந்துகொண்டவர்கள் சுகாதார அறிவுறுத்தல்களைப் பின்பற்றியதாகத் தெரியவில்லை. அவர்கள் முகக் கவசம் அணியவில்லை. தனிநபர் இடைவெளி

உள்ளே... 2

## சனிக்கிழமைகளிலும் நீதிமன்றம் இயங்கும்!

### இலங்கை வரலாற்றில் இது முதற்தடவை

*கொழும்பு, மே 23*

*இலங்கை நீதிமன்ற வரலாற்றில் முதற்தடவையாக சனிக்கிழமைகளில் வழக்கு விசாரணைகளை* 2

## செவ்வாய்க்கிழமை முதல் மாகாண போக்குவரத்து?

*கொழும்பு, மே 23*

*சுகாதார பிரிவினரின் அனுமதி கிடைக்கும்பட்சத்தில் உடனடியாக மாகாணங்களுக்கு இடையிலான பேருந்துச் சேவைகளை முன்னெடுக்க எதிர்பார்க்கப்படுகின்றது என்று இலங்கைப் போக்குவரத்து சபையின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:* 2

## 226 பேர் இலங்கை மீண்டனர்

*கொழும்பு, மே 23*

*கொரோனா வைரஸ் பரவல் காரணமாக ரஷ்யாவின் மொஸ்கோவில் சிக்கித்தவித்த 260 பேர் சிறப்பு விமானம் மூலம் இலங்கைக்கு அழைத்துவரப் பட்டுள்ளனர். சிறீலங்கன் எயார் லைன்ஸிற்குச்* 2

## ஊரடங்கு நடைமுறையில் செவ்வாய் முதல் மாற்றம்

*கொழும்பு, மே 23*

*எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முதல் நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் ஊரடங்குச் சட்டம் மறு அறிவித்தல்வரை தினமும் இரவு 10 மணி முதல் அதிகாலை 4 மணிவரை நடைமுறையில் இருக்கும் என ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது. மே 26 ஆம் திகதி முதல் கொழும்பு மற்றும் கம்பஹா தவிர்ந்த ஏனைய* 2



## ஊரடங்கு உத்தரவை மீறிய 541 பேர் கைது!

*கொழும்பு, மே 23*

*ஊரடங்கு உத்தரவை மீறிச் செயற்பட்டனர் என்ற குற்றச்சாட்டில் கடந்த 24 மணி நேரத்தில் 541 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தக் காலப் பகுதியில் 138 வாக னங்களும் கைப்பற்றப்பட்டுள்* 2

## 41 பேர் வீடுகளுக்கு

*கொழும்பு, மே 23*


*இலங்கை விமானப் படையின் கண்காணிப்பின் கீழ் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்த 41 பேர் வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர். அவர்கள் தனிமைப்படுத்தலை நிறைவு செய்து இன்று சனிக்கிழமை காலை அங்கிருந்து வெளியேறியுள்ளனர் என விமானப்படை* 2

## ரூ. 5,000 நிறுத்தத்துக்கு காரணம் எதிர்க்கட்சி!

### இப்படிச் சொல்கின்றார் பிரதமர்

*கொழும்பு, மே 23*

*கொரோனா வைரஸ் முடக்கல் நிலை காரணமாக வாழ்வாதாரத்தை இழந்தவர்களிற்கு 5,000 ரூபா கொடுப்பனவு வழங்குவதற்கு எதிராக தேர்தல் ஆணைக்குழுவிடம் எதிர்கட்சிகள் மனுத்தாக்கல் செய்த காரணத்தினாலேயே கொடுப்பனவு நிறுத்தப்பட்டது என பிரதமர் மஹிந்த ராஜபக்ச குற்றம் சாட்டியுள்ளார். இது குறித்து நேற்று கருத்து தெரிவித்தி* 2



## முல்லைத்தீவில் கடற்படையினர் 2 பேருக்கு கொரோனா தொற்று!

*கொழும்பு, மே 23*

*முல்லைத்தீவில் கேப்பாப்பிலவு விமானப்படை தளத்தில் தனிமைப்படுத்தலில் இருந்த மேலும் 2 பேருக்கு கொரோனா தொற்று இருப்பது பரிசோதனைகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கொரோனா தொற்று இருப்பதாக இனங்காணப்பட்ட 2 கடற்படையினரும் இன்று வெலிகந்த மருத்துவமனைக்கு சிகிச்சைகளுக்காக அனுப்பப்பட்டனர்.* 2

## 52 ஆயிரம் பேருக்கு இதுவரை சோதனை

*கொழும்பு, மே 23*

*இலங்கையில் இதுவரை சுமார் 52 ஆயிரம் பேருக்கு பி.சீ.ஆர் பரிசோதனைகள் செய்யப்பட்டுள்ளன என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. சுகாதார அமைச்சால் நேற்று மட்டும் 1,970 பேருக்கு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்* 2

# நாடு முழுதும் நாளை



இது தொடர்பில் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன மேலும் தெரிவித்த தாவது:
ஊரடங்கு வேளையில் சிறப்புக் கடமை நேரத்தின் அடிப்படையில் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படுவார்கள் என்றும் விசேட கண்காணிப்பு நடவடிக்கை களும் இருக்கும். அதன்படி எதிர்வரும் 2 நாட்களில் வீதிகளில் நடமாடும் பொது மக்கள் மற்றும் வாகனங்கள் சோதனைச் சாவடிகளில் மறிக்கப்பட்டு சோத னைக்கு உட்படுத்தப்படும். வீடுகளுக்குள் ரமழான் பண்டிகையை கொண்டா டுங்கள். இதை மீறி ஒன்றுகூடுபவர்கள் தனிமைப்படுத்தப்பட்ட சட்டத்தை மீறிய தாக கருதப்படுவார்கள் - என்றார். (ம)

## 226 பேர் இலங்கை...

சொந்தமான விமானம் மூலம் இன்று அதிகாலை அவர்கள் இலங்கையை வந்தடைந்தனர். நாடு திரும்பிய அனைவரும் இராணுவத்தால் தனி மைப்படுத்தல் முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (ம)

## 41 பேர்...

ஊடகப்பிரிவு தெரிவித் துள்ளது. மேலும் தனி மைப்படுத்தலை நிறைவு செய்தமைக்கான சான்றி தழ்களும் இதன்போது அவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன. வெலி சர பகுதியில் உள்ள தனி மைப்படுத்தல் முகாம்க ளிலேயே இவர்கள் அனைவரும் தனிமைப்ப டுத்தலுக்கு உட்படுத்தப் பட்டிருந்தமை குறிப்பி டத்தக்கது. (ம)

## 52 ஆயிரம்...

டுள்ளன. இதுவே நாள் ஒன்றுக்கு மேற்கொள்ளப் பட்ட அதிகளவிலான பரிசோதனை என அறி விக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் கடந்த ஏப்ரல் 27ஆம் திகதியன்று ஆகக்கூடுதலாக பணிய கத்தினால் 1,869 பேருக் குப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

## செவ்வாய்க்கிழமை...

சுகாதாரப் பிரிவினரின் அனுமதி கிடைக்கும் பட்சத் தில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முதல் மாகாணங் களுக்கு இடையேயான பேருந்துச் சேவைகளை இயக்குவதற்கு எதிர்பார்க்கின்றோம். இதேவேளை, மாகாணங்களுக்கு இடையேயான பேருந்து சேவை கள் தொடர்பாக போக்குவரத்து அமைச்சருக்கு ஒரு திட்டம் அனுப்பப்பட்டுள்ளது. இதற்கு அனுமதி கிடைக்கும் பட்சத்தில் உடனடியாக மாகாணங்க ளுக்கு இடையேயான பேருந்துச் சேவைகளை முன் னெடுக்க எதிர்பார்க்கின்றோம் என்றார். (ம)

## சனிக்கிழமைகளிலும்...

நடத்துவதற்கு உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. கொரோனா வைரஸ் பரவல் காரணமாக வழக்கு விசாரணைகளில் ஏற்பட்ட தாமதங்களை தவிர்ப் பதே இதன் நோக்கமாகும். இதற்கமைய, எதிர்வ ரும் 30ஆம் திகதி சனிக்கிழமை மற்றும் ஜூன் மாதம் 13ஆம் திகதி சனிக்கிழமை ஆகிய தினங்க ளில் வழக்கு விசாரணைகளை நடத்துவதற்கு உயர்நீதிமன்றம் நடவடிக்கை எடுத்துள்ளது. (ம)

## ஊரடங்கு உத்தரவை

ளன என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித் துள்ளது. இலங்கையில் கொரோனா தொற்று இனங்காணப்பட்டதை அடுத்து கடந்த மார்ச் மாதம் 20ஆம் திகதி ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அன்று முதல் இதுவரை ஊரடங்கு உத்தரவை மீறிச் செயற் பட்டனர் என்ற குற்றச்சாட்டில் 62 ஆயிரத்து 162 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். 17 ஆயிரத்து 460 வாகனங்களையும் பொலி ஸார் கைப்பற்றியுள்ளனர். ஊரடங்கு உத்தரவை மீறிய குற்றச்சாட்டில் 18 ஆயிரத்து 992 பேருக்கு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள் ளது என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர். (எ)

## ஊரடங்கு நடைமுறையில்...

மாவட்டங்களுக்கிடையே போக்குவரத்திற்கு அனுமதியளிக்கப்ப டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.
நாளை ஞாயிற்றுக்கிழமையும் மறுநாள் திங்கட்கிழமையும் நாடு முழுவதிலும் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் எனவும் ஜனாதிபதி ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.(எ 22)

## முல்லைத்தீவில்...

முல்லைத்தீவு - கேப்பாப்புலவு, விமானப் படைத்தளத்தில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த கடற்படையினர் இருவருக்கு கொரோனா தொற்று இருப்பது நேற்றுமுன்தினம் உறுதி செய்யப் பட்டது. மேலும் ஆறு பேருக்கு கொரோனா தொற்று இருப்பது பரிசோதனைகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக நேற்று அறிவிக்கப்பட்டது. தற்போது மேலும் இருவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், அந்த விமானப்படை தளத்தில் இதுவரையில் 10 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (எ)

## ரூ. 5,000 நிறுத்தத்துக்கு

ருந்த பிரதமர் மேலும் தெரிவித்ததாவது: கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட மக்களிற்கு அரசாங்கம் எதனையும் செய்ய வில்லை என தொலைக்காட்சியில் தெரி வித்துக்கொண்டே நிவாரணங்களை நிறுத்துவதற்காக தேர்தல் ஆணைக்குழுவி டம் முறைப்பாடு செய்யும் எதிர்க்கட்சிகள் நாட்டில் உள்ளன. கடந்த ஆட்சியில் இருந்தவர்கள் நாடு மேலும்மேலும் நெருக்கடிக்குள் சிக்கவேண்டும் என விரும்புகின்றனர். மக்கள் குறித்து அவர்க ளிற்கு அக்கறையில்லை. அவர்கள் ஆட்சி யைக் கைப்பற்றுவது குறித்து மாத்திரமே கனவுகாண்கின்றார்கள். இதன் காரணமாக அவர்கள் கொடுப்பனவை நிறுத்துவதற்கு தங்களால் முடிந்த அனைத்தையும் செய் கின்றனர் என்றார்.
முன்னதாக, தேர்தல்கள் ஆணைக்குழுவின் நிலைப்பாட்டிற்கு அமைய ஜூன் மாதத் திற்கான 5,000 ரூபா கொடுப்பனவை வழங்காதிருக்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது என அமைச்சர் பந்துல குணவர்தன அறிவித்திருந்தார். இருப்பி னும் தாங்கள் கொடுப்பனவினை நிறுத்துமாறு எங்கும் தெரிவிக்கவில்லை என தேர்தல்கள் ஆணைக்குழு அறிக்கை ஒன்றினை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## புதினம் தெரியுமோ?

யைக் கூட்டத்தில் கடைப்பிடித்தனர் என்று சொல்லப்பட்டாலும் சந்திப்பின்பின்னர் தனிநபர் இடைவெளியைக் காற்றில் பறக்க விட்டு அவர்கள் “செல்பி” எடுத்துக் கொண்டாடிய ஒளிப்படங் கள் சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டுள்ளன. சமூகத்துக்கு முன்னுதாரணமாக இருக்க வேண்டியவர்களே இப்படி நடந்து கொள்கிறார்களே என்று முணுமுணுக்கின்றனர் அந்த ஒளிப்படங் களைப் பார்த்தவர்கள்.
இந்தச் சந்திப்புப் பற்றிய இன்னொரு சுவாரசியமும் உண்டு. சில நாள்களுக்கு முன்னர் ஜமீனின் கட்சியைச் சேர்ந்த அரசியல்வாதி ஒருவர் கருத்துக் கூறி பல தரப்பினரிடமும் இருந்து வாங்கிக் கட்டிக் கொண்டார். அந்த அரசியல்வாதியின் கருத்துக்கு தமிழ் அரசியல் களத்தில் உள்ள அநேகர் காட்டமான எதிர்ப்புகளை வெளிப்படுத்தியிருந்தனர். அந்த நேரத்தில் இந்த ஜமீன் வாயைத் திறக்காது கமுக்கமாக இருந்து கொண்டார். தமிழ்த் தேசியம் உயிர் மூச்சு என்று முழங்கித் தள்ளும் அவர் வாயே திறக்காது இருந்ததும் அப்போது பரவலாகப் பேசப்பட்டது. அதன் பின்னணி இப்போதுதான் வெளியே வருகின்றது.
நேற்று நடந்த சந்திப்பு ஜமீன் வாயை மூடிக் கொண்டிருந்தமைக்கு நன்றி பாராட்டும் சந்திப்பாம். வாயைக்கொடுத்து வாங்கிக் கட்டிக் கொண்ட அரசியல்வாதியின் ஆதரவாளர்கள்தான் இந்தச் சந்திப் பில் கலந்து கொண்டார்கள். அவர்கள் தங்கள் முகநூல் பக்கத்தில் பதிவிட்டுவிட்டுத்தான் இந்தச் சந்திப்புக்கே சென்றிருக்கிறார்கள். இவர்களின் கட்சியைச் சேர்ந்த எல்லோரும் ஒரு பக்கத்தில் நிற்க, வாயைக்கொடுத்து வாங்கிக் கட்டிய அரசியல்வாதியும், ஜமீனும் ஒரு பக்கமாக நிற்கிறார்கள், கட்சியை உடைத்து இரண்டாக்கும் கைங்க ரித்தைச் செய்கின்றார்கள் என்கிறார்கள் விடயமறிந்தவர்கள்.

## திருட்டு குற்றச்சாட்டில் ஒருவர் கைது

சம்பாந்துறை,மே 23

வேளாண்மைக்குப் பயன்படுத் தும் இயந்திரத்தின் உதிரிப்பாகங் களை திருடினார் என்ற குற்றச் சாட்டில் ஒருவர் கைதுசெய்யப் பட்டுள்ளார்.

அம்பாறை மாவட்டம் சம்மாந் துறை புதுப்பள்ளி பகுதியில் வேளாண்மை வெட்டும் இயந் திர உதிரிப்பாகங்கள் அண்மைக் காலமாக களவாடப்படுவதாக சம்மாந்துறை பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது. அதைய டுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது சம்மாந் துறை நகரப்பகுதியில் உள்ள இரும்புக்கடை ஒன்றில் விற்ப னைக்காக மறைத்து வைக்கப் பட்ட நிலையில் உதிரிப்பாகங் கள் மீட்கப்பட்டன.

சம்பவம் தொடர்பில் ஒருவர் கைதுசெய்யப்பட்டார். மேல திக விசாரணைகளை பொலி ஸார் மேற்கொண்டு வருகின்ற னர். (ஐ)

# 7 கோடி ரூபா பெறுமதியான போதைப்பொருள்கள் சிக்கின

## இலங்கைக்கு கடத்தவிருந்த நிலையில் தமிழக பொலிஸார் வளைத்துப் பிடிப்பு

சென்னை, மே 23

பாக்கு நீரிணைக் கடல் வழியாக இந்தியாவில் இருந்து இலங்கைக்குக் கடத்தப்படவிருந்த பலகோடி ரூபா இந்திய மதிப்பிலான போதைப் பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டன என்றும், போதைப் பொருள் கடத்தல் தொடர்பில் ஏழு பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் அந்த நாட்டுப் பொலிஸார் தெரிவித்தனர்.

தமிழ்நாடு, ராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை ஊடாக இலங்கைக்கு கடத்தப்படவிருந்த போதைப் பொருள்களே கைப்பற்றப்பட்டுள்ளன. ராமநாதபுரம் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில்



அந்தப் பகுதியின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

நேற்று இரவு திருவாடனை அருகில் வாகனங்களைச் சோதனையிட்டபோது ஓட்டோ ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த போதைப் பொருள் கண்டுபிடிக்கப்பட்டது.

போதைப்பொருள்களான மெத்தோக்குலான், ஆம்ப்பிட்டமெயின், பெத்தாமெட்டமின் மற்றும் செம்மரக் கட்டைகள், கைபேசிகள், எடை பார்க்கும் இயந்திரம் உள்ளிட்ட பொருள்கள் மறைத்து வைத்திருந்த நிலையில் அவையும், ஒட்டோவும் பறிமுதல் செய்யப்பட்டன.

இந்தச் சம்பவம் தொடர்பில் இந்தியாவின் வட மாநிலத்தைச் சேர்ந்த 7 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும், விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் ராமநாதபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

கைப்பற்றப்பட்ட போதைப் பொருள்களின் சர்வதேச மதிப்பு சுமார் 5 முதல் 7 கோடி இந்தியா ரூபா என்று ராமநாதபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ)

# பொலிஸ் அதிகாரிகள் அறுவருக்கு மாற்றல்!

கொழும்பு, மே 23

மூத்த பொலிஸ் அதிகாரிகள் அறுவர் உட்பட 11 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு அத்தியாவசிய சேவை கருதி இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய குற்றப்புலனாய்வு திணைக்கள பணிப்பாளராக சிரேஸ்ட பொலிஸ் அதிகாரி ஏ.ஆர்.பீ.ஜே.அல்விஸ் நியமிக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

குற்றப்புலனாய்வு திணைக்கள பணிப்பாளராக கடமையாற்றிய மூத்த பொலிஸ் அதிகாரி டபிள்யூ.திலகரத்ன அமைச்சர்கள் பாதுகாப்பு பிரிவின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவின் புதிய பணிப்பாளராக மூத்த பொலிஸ் அதிகாரி டி.ஜி.என்.டபிள்யூ.டி.தல்துவ நியமிக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

அவர் இதற்கு முன்னர் கடமையாற்றிய மேல் மாகாண புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் பதவிக்கு சிரேஸ்ட பொலிஸ் அதிகாரி எச்.பீ.ஏ.புஸ்பகுமார நியமிக்கப்பட்டுள்ளார். மூத்த பொலிஸ் அதிகாரி கே.ஜி.எல்.கீதால் சிறப்பு புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கு முன்னர் அவர் நுகேகொட பகுதிக்கு பொறுப்பானவராக கடமையாற்றினார்.

அமைச்சர்களின் பாதுகாப்பு பிரிவின் பணிப்பாளராக கடமையாற்றிய மூத்த பொலிஸ் அதிகாரி டபிள்யூ.எச்.பி.அஜித் ஹெசிறி பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்த இடமாற்றங்களுக்கு தேசிய பொலிஸ் ஆணைக்குழு மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் அனுமதி பெறப்பட்டுள்ளது என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. இவர்களைவிட மேலும் மூன்று பொலிஸ் அதிகாரிகளுக்கும் மற்றும் இரண்டு உதவி பொலிஸ் அதிகாரிகளுக்கும் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# நாகபூசணி அம்மன் கோவிலில் குழப்பம்

யாழ்ப்பாணம், மே 23

யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் சீரணி அம்மன் ஆலயத்தில் இதுவரை காலமும் பூசை செய்துவரும் குருக்களை மாற்றியதால் நேற்று அங்கு குழப்பம் ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

போரின் பின்னர் அந்தக் கோவில் நிர்வாகம் இயங்கவில்லை. கோவிலுக்கு ஒரு சிலர் உரிமை கோரி வருகின்றனர். கோவில் தொடர்பான வழக்கு நீதிமன்றில் இடம்பெற்று வருகின்றது.

இந்தநிலையில் அங்கு பூசை செய்துவரும் குருக்கள் திடீரென நிறுத்தப்பட்டு வேறு ஒருவர் பூசை வழிபாடுகளை மேற்கொள்ள முற்பட்டதால் அதற்கு கிராமமக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர் என்றும் அதனால் குழப்பம் ஏற்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு விரைந்த மானிப்பாய் பொலிஸார் கொரோனா காலத்தில் ஆலயத்தில் இவ்வாறு ஒன்றுகூட முடியாது என்றுகூறி அனைவரையும் வெளியேற்றினர். சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் விசாரணைக்காக மானிப்பாய் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-111)

# வவுனியா ஆலயங்களில் கலந்துரையாடல்

வவுனியா, மே 23

கொவிட் 19 நோயிலிருந்து மக்களைப் பாதுகாப்பது தொடர்பாகவும் மற்றும் ஆலய வழிபாட்டை மீளவும் ஆரம்பிப்பது தொடர்பானதுமான கலந்துரையாடல் வவுனியா வைரவப்புளியங்குளம் ஆதிவிநாயகர் ஆலய பாலாம்பிகை மண்டபத்திலும், நெலுக்குளம் பொதுநோக்கு மண்டபத்திலும், ஆச்சிபுரம் கிராம அபிவிருத்தி அலுவலகத்திலும் நடைபெற்றுள்ளது.

வவுனியா மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியம், வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியம், மற்றும் ஆலய பரிபாலன சபைகளின் பங்கு பற்றுதலுடன் சுகாதார சேவையின் திணைக்கள உத்தியோகத்தர்களால், இந்தக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கலந்துரையாடல் அனைவருக்கும் பயன்பாடுடையதாக அமைந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ப-222)

# முகக் கவசங்கள் கையளிப்பு

மன்னார், மே 23

மன்னார் மாவட்ட பொது மருத்துவமனைக்கு தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கம் ஒரு தொகுதி முகக் கவசங்களை நேற்று கையளித்தது.

தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் மருத்துவமனைக்கு நேரடியாகச் சென்று மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் க.செந்தூர்பதிராஜாவிடம் முகக் கவசங்களைக் கையளித்தார். (ஐ-56)

# வெலிசறை முகாம் இருவாரங்கள் பூட்டு

கொழும்பு, மே 23

கம்பஹா, வெலிசறை கடற்படை முகாம் இன்னும் இரண்டு வாரங்களுக்கு மூடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

முகாமிலிருந்த பலருக்கும் கொரோனா தொற்று ஏற்பட்டதை அடுத்து சிப்பாய்கள் தனிமைப்படுத்தல் முகாம்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். இந்தநிலையில் சுகாதாரத் துறையினரின் பரிந்துரைகளின் அடிப்படையில் அந்த முகாம் மூடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)



# ஜனாதிபதியின் உரைகேட்டு மகாசங்கம் புளகாங்கிதமாம்

கொழும்பு, மே 23

படைவீரர்கள் நினைவு தின விழாவில் ஜனாதிபதி ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்க அகராதியில் வார்த்தைகள் இல்லை எனக் குறிப்பிட்டுள்ள மகாசங்கத்தினர், அதற்காக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவை ஆசீர்வதித்தும் உள்ளனர்.



ஒவ்வொரு மாதமும் மூன்றாவது வெள்ளிக்கிழமை ஒன்று கூடும் பௌத்த ஆலோசனைச் சபை இரண்டாவது தடவையாக நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஒன்றுகூடியது. அங்கு கருத்துத் தெரிவித்த போதே மகாசங்கத்தினர் மேற்கண்டவாறு தெரிவித்தனர் என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு அனுப்பியுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் உள்ளதாவது:

கிழக்கு மாகாணத்தில் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை முறையாக மதிப்பீடு செய்து பாதுகாப்பதற்கு பாதுகாப்பு செயலாளரின் தலைமையில் ஜனாதிபதி செயலணியொன்று அமைக்கப்படும் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்தார்.

தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அழிவடைவது குறித்து பல்வேறு தரப்பினர் விடயங்களை முன்வைத்து வருகின்றனர். இவை அனைத்தையும் கருத்திற்கொண்டு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை மையப்படுத்தி அவற்றை பாதுகாக்கும் பரந்த நிகழ்ச்சித் திட்டமொன்று தொல்பொருள் திணைக்களத்தின் உதவியுடன் நடைமுறைப்படுத்தப்படும் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

பௌத்த சமயத்துக்கும், திரிபீடகத்துக்கும் முரணாக சில பிக்குகளின் செயற்பாடுகள் உள்ளதால் பௌத்த சாசன உரையாடலொன்றின் தேவை தொடர்பாக மகா சங்கத்தினர் விரிவாக ஜனாதிபதிக்கு தெளிவுபடுத்தினர். அதுபற்றி மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் மற்றும் முன்மொழிவுகளைச் சமர்ப்பித்தால் தனது பதவிக்காலத்தில் அதற்குத் தேவையான தீர்வை பெற்றுக்கொள்ள முடியும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார். உலகின் அனைத்து நாடுகளும் கொவிட்19 நோய்த்தொற்றால் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில் நாட்டின் அனைத்து மக்களையும் பாதுகாத்து ஜனாதிபதி மேற்கொண்டு வரும் பணியை மகாசங்கத்தினர் பாராட்டினர்.

நாடெங்கிலும் பரவியுள்ள போதைப்பொருள் பிரச்சினையை ஒழிப்பதற்கு விரிவான நிகழ்ச்சித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியத்தை மகாசங்கத்தினர் வலியுறுத்தினர். இந்த விடயத்தில் அரசாங்கத்துக்கும், மகாசங்கத்துக்கும் பெரும் பொறுப்பு உள்ளது என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். தேசிய பாதுகாப்பு பற்றிய தனது பொறுப்பை முழுமையாக நிறைவேற்றுவதாகவும், அதற்காக திறமையும் இயலுமையும் கொண்ட அதிகாரிகளை நியமித்துள்ளதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். படைவீரர்கள் நினைவு தின விழாவில் ஜனாதிபதி ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்க அகராதியில் வார்த்தைகள் இல்லை எனக் குறிப்பிட்ட மகாசங்கத்தினர், அதையிட்டு ஜனாதிபதியை ஆசிர்வதித்தனர் - என்றுள்ளது. (எ)



## பொன்சேகாவுக்கு கொடுத்த காணியைப் பறித்தது அரசு!

கொழும்பு, மே 23

முன்னாள் இராணுவத் தளபதியும், நாடாளுமன்ற உறுப்பினருமான பீல்ட் மார்சல் சரத் பொன்சேகாவுக்குக் கடந்த அரசு குத்தகை அடிப்படையில் வழங்கியிருந்த காணி ஒன்று தற்போதைய அரசால் மீளப்பெறப்பட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

கொழும்பு, நாரஹென்பிட்டியில், கிரிமண்டல மாவத்தையில் உள்ள இந்தக் காணியை முன்னாள் இராணுவத் தளபதியின் பாதுகாப்புப் பிரிவினர் பயன்படுத்தியிருந்தனர். அதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை கடந்த ஆட்சில் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சராக இருந்த சம்பிக்க ரணவக்க சமர்ப்பித்திருந்தார்.

தற்போது அந்தக் காணி, காணி அபிவிருத்தி அதிகார சபையால் மீளப் பெறப்பட்டுள்ளது என்றும், அதற்கான கடிதம் சரத் பொன்சேகாவுக்கு அனுப்பப்பட்டுள்ளது என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (எ)



## மாங்குளத்தில் பலத்த காற்று

### வாகன திருத்துமிடம் சேதம்

வவுனியா, மே 23

வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மாங்குளம் பகுதியில் நேற்றுக் காலை வீசிய பலத்த காற்றின் காரணமாக வாகன திருத்துமிடம் சேதமடைந்துள்ளது.

பலத்த காற்றால், வாகன திருத்துமிடத்திற்கு அருகேயிருந்த தென்னைமரம் சரிந்து வீழ்ந்ததலில் வாகனத் திருத்துமிடம் சேதமடைந்துள்ளது. வவுனியாவில் கடந்த சில நாள்களாகவே இவ்வாறு பலத்த காற்று வீசிவருகின்றது, ஆங்காங்கே சேதங்களும் ஏற்பட்டுள்ளன. (ப-110,18)

## வீட்டுத்தோட்ட விதைகள் அடுத்தவாரம்

வேலணை, மே 23

வேலணை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மக்களுக்கு வீட்டுத்தோட்டம் செய்வதற்கான மரக்கறி விதைகள் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் நலன்விரும்பிகளின் நிதிப்பங்களிப்பில் மரக்கறி விதைகள் அடுத்த வாரமளவில் வழங்கப்படவுள்ளன.

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலையால் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதால் மக்கள் கடந்த 2 மாதங்களாக வீட்டுக்குள் முடங்கி இருந்தனர். இந்த நிலையில் வீட்டுத்தோட்டம் செய்து நஞ்சற்ற விவசாய உற்பத்தியை மக்கள் மேற்கொள்ளவேண்டும் என்று அரசு தெரிவித்தது. அதற்கு அமைவாக விதைகளும் மக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன. வேலணை பிரதேச சபையும் மக்களுக்கு மரக்கறி விதைகளை வழங்கி வீட்டுத்தோட்டத்தை ஊக்குவிக்க முன்வந்துள்ளது. (ஐ-7)

## திருமலை மெதடிஸ்த பெண்கள் கல்லூரியில் விசேட கலந்துரையாடல்

திருகோணமலை, மே 23

திருகோணமலை மெதடிஸ்த பெண்கள் கல்லூரியின் ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்களுக்கு மீண்டும் பாடசாலை ஆரம்பிக்கும் போது எடுக்கப்படவேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து விளக்கமளிக்கும் விசேட கலந்துரையாடல் நேற்று கல்லூரியின் பிரதான மண்டபத்தில் கல்லூரியின் அதிபர் திருமதி. சுபத்ரா ஜான் தேவதாஸ் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் பொதுச் சுகாதார உத்தியோகத்தர் ஜெகனால் ஆசிரியர்களுக்கு கொரோனா வைரஸ் தாக்கம் பற்றியும் அதனால் முகக் கவசம் அணிவதன் அவசியம் பற்றியும் பாடசாலையில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் சமூக இடைவெளியின் முக்கியத்துவம் பற்றியும் சுகாதார நடவடிக்கைகள் பற்றியும் விசேட விழிப்புணர்வு கலந்துரையாடல் இடம்பெற்றது. (ப)



## அத்தியாவசிய பொருள்களின் இறக்குமதி வரி அதிகரிப்பு

கொழும்பு, மே 23

இறக்குமதி செய்யப்படும் சில பொருள்களின் வரிகள் நேற்று முன்தினம் முதல் அதிகரிக்கப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. சீனி, பருப்பு , பேரீச்சை, ரின் மீன், சிவப்பு வெங்காயம் , வெள்ளைப் பூண்டு, உருளைக்கிழங்கு, தோடம்பழம் , அப்பிள் பழம் , யோக்கட் உள்ளிட்ட பல பொருள்களுக்கான வரியே அதிகரிக்கப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# தமிழர் மீதான இனப்படுகொலை முன்னறிவித்தலே கோத்தா உரை!

## வடக்கு முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவிப்பு

கொழும்பு, மே 23

இன அழிப்பின் பின்னரும் தமிழ் மக்கள் தமது உரிமைகளுக்காக தொடர்ந்து போராடிவரும் நிலையில், எதிர்காலத்தில் மிக மோசமான கட்டமைப்புசார் இனப்படுகொலை ஒன்றும் ஏனைய மனித உரிமை மீறல்களும் தமிழ் மக்களுக்கு எதிராக இடம்பெறப்போவதற்கான ஒரு முன்அறிகுறியாகக் கூட ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் போர் வெற்றி நாள் அறிவிப்புக்கள் இருந்திருக்கலாம் என்று தோன்றுகிறது.

இவ்வாறு வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் நேற்று விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது:

முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தில் எனது உரையின்போது பின்வருமாறு நான் கூறியிருந்தேன். "ஐ. நா மனித உரிமைகள் சபையினூடான பொறுப்புக்கூறல் முன்னெடுப்புக்கள் இதுவரையில் தோல்வியை அடைந்துள்ள நிலையில் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். ஐ. நா மனித உரிமைகள் சபையினை இலங்கை அரசு முற்றாக ஏமாற்றி உதாசீனம் செய்துள்ள நிலையில், ஐ. நா பொதுச் சபையில் இருந்து இலங்கையின் உறுப்புரிமையை இரத்துச்செய்வதற்கு சர்வதேச சமூகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று கூறி வைக்கின்றேன்.

இந்த நிலைமை மிக விரைவில் ஏற்படப்போகின்றது என்று நினைத்தாரோ என்னவோ ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச இம்மாதம் 19ஆம் திகதி நடைபெற்ற போர் வெற்றிவிழா கொண்டாட்டத்தில் "எமது நாட்டுக்கு அநீதியான வகையில் ஏதேனும் ஒரு சர்வதேச நிறுவனம் அல்லது சர்வதேச அமைப்பு தொடர்ந்தும் செயற்படுமாக இருந்தால் அந்த நிறுவனத்தின் அல்லது அமைப்பின் உறுப்புரிமையிலிருந்து இலங்கையை விலக்கிக் கொள்ள நான் ஒரு போதும் பின்நிற்கப் போவதில்லை" என்று தெரிவித்துள்ளார்.

எனவே இலங்கை குற்றம்புரிந்து கொண்டிருப்பதை உலகம் அறிந்துள்ளது என்று கண்டே வீராப்பாக கதைக்கத் தொடங்கியுள்ளார் ஜனாதிபதி என்று புலப்படுகிறது. வரப் போவதைத் தடுக்க அவருக்கு வேறு வழி தெரியவில்லை போலும். அவர் ஆற்றிய உரை போர்க் குற்றவாளிகளைக் காப்பாற்ற எத்தகைய துன்பத்துக்குள்ளும் இலங்கையை கொண்டு போக அவர் துணிந்துவிட்டார் என்பதை



எடுத்துக் காட்டுகின்றது.

போர் வெற்றிவிழா கொண்டாட்டத்தில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச ஆற்றியுள்ள உரை வரலாற்றின் அடிப்படையில் புரையோடிப் போயிருக்கும் இந்த நாட்டின் இன முரண்பாட்டை கிஞ்சித்தும் கவனத்தில் எடுக்காமல் அலட்சியம் செய்து, படையினருக்கு எதிராகச் செயற்பட்டால் சர்வதேச நிறுவனங்களில் இருந்து வெளியேறப் போவதாகவும் எச்சரிக்கை செய்துள்ளமை எத்தகைய ஒரு துன்பத்துக்குள் இலங்கை எதிர்காலத்தில் சிக்கி தவிக்கப்போகின்றது என்பதையே காட்டுகின்றது.

ஆனால் போர்க்குற்றவாளிகளே இன்றைய இலங்கையின் ஆட்சியாளர்கள். அவர்கள் தம்மை பாதுகாத்துக் கொள்வதற்காக இனவாதத்தையும் போலி தேசியவாதத்தையும் மூலோபாயமாக பயன்படுத்தி வருவதன் ஒரு எதிரொலிதான் இது. இந்த சிந்தனையுடன் செயற்படும் அவர்களால், ஒருபோதும் நாட்டைப்பற்றி சிந்தித்து, வளமான ஒரு நாட்டை தூர நோக்கச் சிந்தனையுடன் ஏற்படுத்திக் கொடுக்க முடியாது. அத்தகையவர்களிடம் இருந்து இவ்வாறான கருத்துக்கள் வெளிவருவதில் ஆச்ச ரியப்படுவதற்கு ஒன்றுமேயில்லை.

எமது மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலைக்கு நீதியை பெற்று அதன் மூலம் ஒரு நிலையான அமைதியை இலங்கையில் ஏற்படுத்த நாம் முயற்சிக்கிறோம். ஆனால், தாம் நிகழ்த்திய இனப்படுகொலையில் இருந்து தப்புவதற்கும் தொடர்ந்து எமக்கு எதிராக கட்டமைப்புசார் இனப்படுகொலையை நிகழ்த்துவதற்கும் அரசு முயலுகின்றது. சர்வதேச அமைப்புக்கள் மற்றும் மனித உரிமை கடப்பாடுகளில் இருந்து விலகுவன் மூலம் இவற்றை அடையலாம் என்பது ஆட்சியாளர்களின் எதிர்பார்ப்பு. சர்வதேச அமைப்புக்களில் இருந்து விலகநேரிடும் என்று அரசு அறிவித்துள்ளமை 2008 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் கடும் போர் நடைபெறுக்கொண்டிருந்தபோது சர்வதேச அமைப்புக்கள் மற்றும் மனிதாபிமான அமைப்புக்களை வன்னியில் இருந்து வெளியேறுமாறு அரசு பணித்தமை நினைவுக்கு வருகின்றது. சர்வதேச அமைப்புக்களை வன்னியில் இருந்து வெளியேற்றிவிட்டு சாட்சி இல்லா போர் ஒன்றை நடத்தி எமது மக்களை அரசு இன அழிப்புக்கு உள்ளாக்கியது. அரசு, அப்போது சர்வதேச அமைப்புக்களை வன்னியில் இருந்து வெளியேற்றியபோது பெரும் மனித உரிமை மீறல்கள் இடம்பெறும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தபோதிலும் ஐ. நா மற்றும் சர்வதேச சமூகம் ஆகியவை கோட்பாடுகளுக்கு அமைவாக உரிய முன்னேற்பாட்டு நட வடிக்கைகளை மேற்கொள்ளாமையே இன அழிப்பு நடைபெறுவதற்கு வழிகோலியது.

இன அழிப்பின் பின்னரும் தமிழ் மக்கள் தமது உரிமைகளுக்காக தொடர்ந்து போராடிவரும் நிலையில், எதிர்காலத்தில் மிக மோசமான கட்டமைப்பு சார் இனப்படுகொலை ஒன்றும் ஏனைய மனித உரிமை மீறல்களும் தமிழ் மக்களுக்கு எதிராக இடம்பெறப்போவதற்கான ஒரு முன் அறிகுறியாகக் கூட ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் போர் வெற்றி நாள் அறிவிப்புக்கள் இருந்திருக்கலாம் என்று தோன்றுகிறது.

அதேவேளை, நடைபெற்ற இனப்படுகொலையை சர்வதேச ரீதியில் சுயாதீனமாக விசாரணை செய்வதற்கும் காலம்தாழ்த்தாமல் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். சர்வதேச சுயாதீன விசாரணை ஒன்று நடைபெறுமானால் எமது அப்பாவி சிங்களச் சகோதரர்களுக்கு இறுதிப்போரில் என்ன நடந்தது என்பதை உணர்த்தி அவர்களின் பௌத்த தர்மம் காட்டும் வழியில் எமக்கான பரிகார நீதியை பெற்று இணைந்த வடக்கு கிழக்கில் சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில் தீர்வு ஒன்றினை காண முடியும் என்று நம்புகின்றேன். இதன் மூலம், சுபீட்சமான இலங்கையை கட்டியெழுப்பலாம். நீதித்துறையின் சட்டம் கூட இருவேறாக தென் இலங்கைக்கும் வடக்கு கிழக்கிற்கும் பிரயோகிக்கப்படுகின்றது. நினைவுகூரல் நிகழ்வுகளில் கலந்துகொண்டவர்கள் மீது கொரொனா தனிமைப்படுத்தல் விதிமுறைகள் பாய்கின்றன. ஆனால், தென் இலங்கையில் போர் வெற்றி விழா கொண்டாடுபவர்கள் மீது எந்த சட்டமும் பாய்வதில்லை. ஆகவே, இலங்கைத் தீவை இரண்டாகப் பிரிக்கும் வகையில் உண்மையாகவே செயற்படுவது யார் என்று கேள்வி கேட்க விரும்புகிறேன்.

ஜனாதிபதி தற்போது தாம் இராணுவத்தில் இல்லை என்பதையும் இந்த நாடு முழுவதற்கும் அதில் வாழும் மக்களுக்கும் பொறுப்புக் கூற வேண்டிய ஒரு உன்னத பதவியை அவர் வகிக்கின்றார் என்பதையும் தயவுசெய்து இனியாவது மனதில் நிலை நிறுத்துவாராக- என்றுள்ளது. (எ)

## வீதி விபத்தில் முதியவர் காயம்

சாவகச்சேரி, மே 23

படையினரின் வாகனம் மோதியதில் சைக்கிளில் சென்ற முதியவர் காயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்று கைதடியில் இடம்பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த கந்தசாமி தர்மகுலசிங்கம் (வயது60) என்னும் முதியவரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ-9)



## குருதிக் கொடை முகாம்

யாழ்ப்பாணம், மே 23

கருகம்பனை தமிழ் மன்றம், சனசமூக நிலையம், இந்து இளைஞர் கழகம் மற்றும் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் குருதிக் கொடை முகாம் நடைபெறவுள்ளது.

குருதிக்கொடை முகாம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை கருகம்பனை கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்படுவதால் குருதிக்கொடையாளர்களுக்கு போக்குவரத்து ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படவுள்ளன. மேலதிக விவரங்களுக்கு 0773241755, 0772988917 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஐ-222)

# இராணுவ ஆட்சிதான் கோத்தாவின் எண்ணம்

## முன்னாள் அமைச்சர் சீற்றம்

கொழும்பு, மே 23

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நாட்டில் இராணுவ ஆட்சியை உருவாக்குகிறார் என முன்னாள் அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார குற்றம்சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அமைச்சுகளின் செயலர்களாக இராணுவ அதிகாரிகளை நியமிப்பதன் மூலம் நாட்டில் இராணுவ ஆட்சியை உருவாக்குவதற்கான முயற்சியில் ஜனாதிபதி ஈடுபட்டுள்ளார். இவ்வாறான நடவடிக்கைகளுக்கு எதிராக அனைத்து கட்சிகளும் அணி திரளவேண்டும். சில பதவிகளுக்கு முதல் தடவை இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். சுகாதார நீர்ப்பாசன விவசாய மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலர்களாக இராணுவ அதிகாரிகளே காணப்படுகின்றனர். இதன் மூலம் மக்களின் ஜனநாயக உரிமைகள் பறிக்கப்படுகின்றன. இவ்வாறான ஜனநாயக விரோத நடவடிக்கைகளுக்கு எதிராக மக்கள் அணிதிரள வேண்டும்' என்றார். (ம)

## சலூனில் பணிபுரிவோருக்கு முகக் கவசங்கள் கையளிப்பு

யாழ்ப்பாணம், மே 23

பச்சிளைப்பள்ளி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட சிகையலங்கார நிலையங்களுக்கு முகக் கவசங்கள் வழங்கப்பட்டன..
சிவன் பவுண்டேசன் அறக்கட்டளையால் கிளிநொச்சி மாவட்ட இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஊடாக சிகை அலங்கார நிலையங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கே இவ்வாறு முகக் கவசங்கள் வழங்கப்பட்டது. (ப-6)

# அம்பானால் பந்தாடப்பட்ட பப்பாக்கள்!

வலிகாமம், மே 23

வலிகாமம் கிழக்கு ஈவினைப் பகுதியில் நேற்று வீசிய கடும் காற்றால் சுமார் நூறுக்கு மேற் பட்ட பப்பா மரங்கள் முறிந் துள்ளன.

அறுவடைக்குத் தயாராக இருந்தநிலையில் பழங்களு டன் பலநூறு பப்பா மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளன. இத னால் தாம் பெரும் இழப்பைச் சந்திக்க நேர்ந்துள்ளது என்று பப்பா செய்கையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (ம-7)



# வடக்கு – கிழக்கு வீரர்களுக்கு வாய்ப்புக்களை வழங்குங்கள்

## மஹிந்தவுடனான சந்திப்பில் சங்கா, மகேல இடித்துரைப்பு

கொழும்பு, மே 23



ஹோமாஹமவில் மிகப் பெரும் கிரிக்கெட் மைதானத்தை அமைப்ப தற்குப் பதிலாக, வடக்கு - கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த கிரிக்கெட் வீரர்க ளுக்கு கூடுதல் வளங்களை யும், வாய்ப்புக்களையும் வழங்க முன்வாருங்கள் என்று வலியுறுத் தினார் இலங்கை அணியின் முன்னாள் தலைவர் குமார் சங்கக்கார.

ஹோமாஹமவில் புதிதாக மைதா னத்தை அமைப்பது தொடர் பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ச இலங்கை அணியின் முன்னாள் வீரர்களை நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப்பிலேயே வடக்கு, கிழக் கைச் சேர்ந்த கிரிக்கெட் வீரர்க ளுக்காக குரல்கொடுத்துள்ளார் சங்கா. முன்னாள் தலை வரான மகேலவும் வடக்கு - கிழக்கில் விளையாட்டுசார் கட்டுமானங் களை வலுப்படுத்த வேண் டும் என்று வலியுறுத்தினார்.

இது தொடர்பில் சங்கா மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு - கிழக்கில் மிகத் திற மையான வீரர்கள் உள்ளனர். அவர்களுக்கு பாரபட்சம் காட்டாமல் வாய்ப்புக்களை வழங்க வேண்டும். யாழ்ப்பா ணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி யில் கடினப்பந்து ஆடுகளத்தை அமைத்தோம். இதன்மூலம் அங்கு கௌசல்யன் போன்ற சிறந்த வீரர்களை அடையாளம் கண்டுள்ளோம். அவர்களுக்கு தொடர்ந்து அதிக வளங்களை யும் வாய்ப்புக்களையும் வழங்க வேண்டும். 26 பாடசாலைக ளுக்கு ஒரு மைதானம் என்ற நிலையே வடக்கு கிழக்கில் உள்ளது. இது மாற்றப்பட வேண் டும். புதிதாக மிகப்பெரிய மைதானத்தை அமைப்பதற்குப் பதிலாக வடக்கு - கிழக்கின் அபிவிருத்தியில் கவனம் செலுத் தலாம். இது இலங்கை கிரிக் கெட்டை அடுத்த கட்டத்தை நோக்கிக் கொண்டுசெல்லும்- என்றார். (ம)



# சீரமைக்கப்படுகிறது குடமுருட்டிப் பாலம்

கொடிகாமம், மே 23

இனந்தெரியாத நபர்களால் களவாடப் பட்ட பரந்தன் - பூநகரி வீதியில் உள்ள குடமுருட்டி இரும்புப் பாலத்தின் திருத்த வேலைகள் இன்று சனிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிறைவேற்றுப் பொறியியலா ளர் சி.எம்.மொறாயஸின் நேரடிக் கண் காணிப்பில் பாகங்களைப் பொருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. (ப-159)

## குழந்தைகளின் நிறைய அளக்க

# தொங்கும் காற்சட்டைகளை கொண்டுவருமாறு பணிப்பு

சாவகச்சேரி, மே 23

ஆரம்ப சுகாதார நிலையங்களில் 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளின் நிறையை அளவி டுவதற்கான தொங்கும் காற்சட்டைகளைக் கொண்டுவருமாறு சுகாதாரப் பகுதியினர் தாய்மார்களுக்கு அறிவித்துள்ளனர்.

இதுவரை காலமும், ஆரம்ப சுகாதார நிலையங்களில் குழந்தைகளின் நிறையை அளவிடுவதற்கான தொங்கும் காற்சட்டை குடும்ப நல சேவையாளர்களால் கொண்டு வரப்பட்டு நிறுவை மேற்கொள்ளப்பட் டது. தற்போது கொரோனா தொற்றுக் காரணமாக ஒவ்வொரு பிள்ளைகளை யும், தனித்தனியான நிறுவைக் காற்சட்டைகளை அணிந்து நிறுக்குமாறு வலியுறுத்தியுள்ள னர். ஆரம்ப சுகாதார நிலையங்களில் நடத்தப்படும் குழந்தைகள் சிகிச்சை நிலை யத்துக்கு வரும் தாய்மார் தங்களது பிள்ளை களின், நலன்கருதி தனியான தொங்கும் காற்சட்டைகளைக் கொண்டுவருமாறும் அறிவித்துள்ளனர் .

மேலதிக விவரங்களைத் தத்தமது பிரிவு குடும்ப நல சேவையாளருடன் தொடர்பு கொண்டு தகவல்களைப் பெற்றுக்கொள்ளு மாறும் அறிவித்துள்ளனர். குழந்தை பிறந் தது தொடக்கம் 5 வயது வரை மாதாந்தம் நிறைகளை மதிப்பிட்டு போசாக்கு உணவு கள் வழங்குவதும் போசாக்குக் குறைந்த பிள்ளைகளுக்கு மருத்துவ சிகிச்சை வழங்கு வதும் குறிப்பிடத்தக்கது. (ப-9)

# மழைக்கு சாத்தியம்



கொழும்பு, மே 23

மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் பல இடங்களில் மழை பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித் துள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம் இன்று சனிக்கி ழமை வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தொடர்பாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

ஊவா மாகாணத்திலும் அம்பாறை மாவட்டத்தி லும் சில இடங்களில் பி.ப 2 மணிக்குப் பின்னர் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடிய சாத்தி யம் காணப்படுகின்றது. புத்தளத்திலிருந்து மன்னார் மற்றும் காங்கேசந்துறை ஊடாக முல்லைத்தீவு வரையான கடற்பரப்புகளிலும் காலியிலிருந்து மாத்தறை மற்றும் ஹம்பாந் தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 5060 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியா லத்துக்கு 4050 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் பலத்த காற்றும் வீசக்கூடும் என்பதால் மக்கள் அவதான மாக இருக்க வேண்டும் என்றுள்ளது. (ம)

# பொலிஸாருக்கும் ஆயுள்வேத மருந்து

அம்பாறை, மே 23

கொரோனாத் தொற்றில் இருந்து பாதுகாக்கும் வகையில் ஆயுள்வேத மருந்து அடங்கிய தொகுதி அம்பாறை மாவட்ட சவளக்கடை பொலிஸ் நிலையத்துக்கு நேற்று வழங்கப் பட்டது.

கல்முனைப் பிராந்திய ஆயுர்வேத மருத்துவ இணைப்பாளர் வைத்தியர் எம்.ஏ.நபீல் குழுவி னரால் இந்த மருந்துத்தொகுதி வழங்கப்பட் டது. "கொரோனாத் தொற்று சந்தேக நிலை யில் தனிமைப்படுத்தப்பட்டிருப்போருக்கே முதலில் இம் மருந்து வழங்கப்பட்டது. தற்போது கொரோனா தடுப்பு செயற்பாடுகளில் ஈடுபடு கின்ற உள்ளூராட்சி மன்றங்கள், பிரதேச செயலக ஊழியர்கள், பொலிஸ் மற்றும் முப்ப டையினரதும் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு அவர்களது பாவனைக்காகவும் இம் மருந்து விநியோகிக்கப்படுகிறது." என்று கல்முனைப் பிராந்திய ஆயுர்வேத வைத்திய இணைப்பாளர் வைத்தியர் எம்.ஏ.நபீல் தெரி வித்தார். (ஐ)



இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 23.05.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.